உ

மூத்தபிள்ளையார் துணை.

சொற்பொழிவாற்றுப்படை

என்னும்,

(பிரசங்கவிதி)

இது,

திருநெல்வேலி,

PALVANNA MUDALIYAR

S. பால்வண்ண முதலியாரவர்களால்

இயற்றி,

மதுரை நான்காந்தமிழ்ச்சங்கத்து
எட்டாவதாண்டு நிறைவின் விழாக்
கொண்டாட்டத்தன்று வீற்றிருந்த
ஸ்ரீ புலவர் அவை
ஏற்றஞ்செய்யப் பெற்றது.

முதற்பதிப்பு.

500.

திருநெல்வேலி
நூருல் இஸ்லாம் பிரஸில்,
பதிப்பிக்கப் பெற்றது.

1911

இதன் விலை—அணா 4

உ

மூத்தபிள்ளையார் துணை.

சொற்பொழிவாற்றுப்படை

CORPOLIVATRUPPADAI

என்னும்,

(பிரசங்கவிதி.)

இஃது,

திருநெல்வேலி,

PALVANNA MUDALIYAR, S

S. பால்வண்ணமுதலியாரவர்களால்

இயற்றி,

மதுரை நான்காந் தமிழ்ச் சங்கத்து

எட்டாவதாண்டு நிறைவின்விழாக்

கொண்டாட்டத்தன்று வீற்றிருந்த

புலவர் அவை

ஏற்றஞ்செய்யப் பெற்றது.

முதற்பதிப்பு.

500.

திருநெல்வேலி

நூருல் இஸ்லாம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

1911

இதன் விலை—அணா 4

உ

மூத்தபிள்ளையார் துணை.

"நூல் வரலாறு."

உலகத்துள் இறைவனாலருளிச்செய்யப்பெற்ற மொழிகள் பலவற்றுள் வடமொழியுந் தென்மொழியு மிக மேலானவைகளாம். தென்மொழி மெல்லிய ஓசையும் இனிமையும் பொருந்தி நிலவுவதாம். அம்மொழிப்புலவருள் பெரும்பாலார் செய்யுளியற்றுவதைத் தமக்கோர் அணிகலனாய்க் கொண்டாரேயன்றி வழக்கியல் நூல்கள் செய்யா தொழிந்தனர். ஆயினும், செய்யுட்களுக்கு உரை எழுதுவதினும் பழய வரலாற்றுப்பாக்களை எடுத்துக்கொண்டு அவைகளின் பொருள்களை அவைக்கண் அகல உரைப்பதினும் மிகத்தேர்ச்சியுற்றவர்களா யிருந்தனரென்பது சொல்லாமலே யமையும். இஃது இங்ஙனமாக பாக்களுக்குரைசெய்யவேண்டாது யாதாமொரு பொருளின் தன்மைகளைப்பற்றி 'ஓரவைக்களத்துப் பேசக்கேட்கில் அப்புலவர்கள் பெரிதும் பின்னடைகின்றனர். அது அவர் அம்முறை பயிலாக்குறைவினாலென்க.

மேல்நாட்டுப்புலவர்கள் இப்பேச்சு முறை பயிலுதற்குப் பற்பல கழகங்கள் ஆங்காங்கமைத்துப் பயின்று, பேசுமாறு கொடுத்ததோர் இயலினை யாவருங் களிக்கும் வண்ணம் குறித்த நேரவரையறையுள் நன்குபேசி முடிக்கின்றனர். இச்செந்தமிழ் நாட்டினும் அவ்வகைக் கழகங்கள் ஏற்படின் பேச்சில் வல்லுநராவதற்குள்ள ஐயம் யாதோ? ஒன்றுமின்றாம். இதுநிற்க, தமிழ்நிலத்துட்பேசுமாற்றலடைவான்கருதி பற்பலபுலவர்கள் இப்பொழுது மிகமுயலுகின்றனர். ஆனால் அவர்கள் அப்பேச்சிற்குரிய நூன்முறைகாணுத் தன்மையால் பெரிதும் பிழைபடுகின்றனர் என்பது கண்கூடாம். தமியேன் பற்பல அவைக்களத்துட் சென்று பேசும்போதும் பேசுவோர் பேச்சைக் கேட்கும்போதும் பேச்சுமுறை நூல் ஒன்றிலதேயெனக் கவலாநிற்பேன். யாரேனும் அக்குறையினை நீக்கித் தாராரோவென்று இதகாறும் எதிர்பார்த்து நின்றும் பயனின்றிப் போயினமை கண்டு பதினொரு இயல்களையுடைய "சொற்பொழி வாற்றுப்படை" என்னும் இச்சின்னூல் வழக்கின் முறையால் வகுத்துவானாயினேன். இஃது வரையுங்கால் இந்நூன் முழுவதும் தமிழ் மொழியாலேயே எழுதப்படவேண்டுமென்னுமெண்ணம் என்பாலுந்த ஒருவாறு அவ்வாறே

எழுதி முடித்தேன். தமிழ் அருஞ்சொற்களுக்கு, பெரும்பாலும் நேரான வடமொழிச் சொற்கள் காட்டும் அட்டவணை ஒன்றும் இத்துடன் சேர்த்துள்ளேன்.

விரைவில் இயற்றிய இந்நூலுள் அறிஞர்களாற் பற்பல குற்றங்கள் பாக்கக் காணக்கூடும். அவ்வாறு காணின் அதனைப் பாராட்டாது குற்றம் நீக்கித் தமியேனைக் கோதாட்டுவாரென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

S. பால்வண்ணமுதலியார்,

திருநெல்வேலி.

பொருளடக்கம்.

INTRODUCTION.

This brochure is a Guide to the Art of Public Speaking and meets a sadly-felt want. In these days of Conferences, Sangams, and Sabahs, in which much work has to be turned out in a few days, our Pandits and Navalars very often disappoint their audience by trespassing on the time appointed for the other speakers; and should they learn the value of time and the art of speaking effectively and to the point, they would not be such great sinners as they are. Even university men often err egregiously on this score, and their

protracted lectures often pall on the auditory in their eagerness to speak long and pour out their hearts. In these circumstances a careful perusal of the *eleven* sections of this treatise in Tamil will, it is hoped, go a long way to stamp out these irregular and objectionable practices and to foster business habits and promote relevant talk in such as are tongue-doughty.

The *first* section is about speech in general; the *second* deals with the practice of speech-making; the *third* treats of how to speak; the *fourth* tells us about the qualifications of a good speaker; the *fifth* relates the fourfold object of speaking; the *sixth* describes the characteristics of a good audience; the *seventh* sets forth the effects of an eloquent speech; the *eighth* fixes the time-limit for a speaker; the *ninth* points on the difference between a lecture and a debate and the length of time that a lecturer and a debater will be allowed to take up; the *tenth* prescribes

the duties or states the functions of a Chairman or President ; and the *eleventh* gives a miscellany of minutiæ about the speaker's position and posture, about the lecture-hall and its illumination and ventilation, and about the behaviour of the President and the assembly respectively. A glossary of difficult words and their meanings brings the tiny volume to a close.

This new venture adds to the author's reputation as a Tamil scholar, and demonstrates how a tincture of English education rationalises our encyclopædic pandits and sets them to work for the good of their coterie Mr. Palvanna Mudaliar, whose *Siddhanta Jnana Ratnavali* and *Saiva Catechism* have given his readers a taste of his religious and metaphysical erudition, and who is now tracing the history of Tamil words and piecing together the current traditions about the ancient local celebrities for weaving out a connected story of the illustrious ancestors

of the historic houses in this district, is an earnest and assiduous student of Tamil literature and a professor of varied learning and deserves the encouragement of appreciating Macænas, who alas! are a few in this iron age and fewer still in this corner of the Indian continent. This deplorable lack of appreciative opulence will, I hope and trust, be amply made up by the reading public who have not hitherto grudged to send for his publications and whose honest and just estimate of his labours has prompted him to put his heart and soul into this new venture and to enter 'fresh fields and pastures new' for the sake of the Tamilian race.

M. S. Purnalingam Pillai, B.A., L.T.,
Camisis College, Tinnevelly.

உ

மூத்தபிள்ளையார் றுணை.

சிறப்புப்பாயிரம்.

மேலகரம் திருவன்,

சுப்பிரமணியக்கவிராயரவர்கள்,

இயற்றிய சாற்றுப்பாக்கள்.

கூடனகர் நான்காந் தமிழ்ச்சங்கங் கூட்டியுயர்
தோடுறுதார்ப் பாண்டித் துரைமன்ன-னீடியபு
வல்லச் சொடுமவையின் மாட்சியுறப் பேசியுரை
சொல்லா பெனவேண்டச் சூழ்ந்து

(தினை

சொற்பொழிவாற் றுப்படைநூல் சொற்றவையி லேற்
பொற்புறுபால் வண்ணப் புலமையோ—னற்புவியை
யாயிரத்துப் பதினொன் றுங்கலியாண் டிற்சங்க
வாயிருமெட் டாம்விழவில் வந்து.

உ

ஶ்ரீ நந்தபிள்ளையார் துணை.

சொற்பொழிவாற்றுப்படை.

காப்பு.

குறள்வெண்பா.

நல்லானைக் கன்றினருள் நண்ணவே நூலறிவுங்
கல்லாதே வந்தெய்துங் காண்.

இறைவன் வணக்கம்.

ஆசிரியப்பா.

"மலைமகள் கொழுநன் மலரடி வழுத்துவல்
புலமுறு செஞ்சொற் பொழிவுக்
காற்றுப்படையா னறைதரற் பொருட்டே"

நூல்.

1. பொதுவியல்.

உலகின் கண்ணுள்ள எல்லாப் பிறவிகளி
னும் மக்கட் பிறப்பே மிக மேலானதாம். அப்

பிறவிக்குரிய யாக்கை வியப்பினை விளைவிக்கும் பொறிபோல்வதொன்றாம். அது புறவுடல், உள்ளுடல், முதலுடல் என முத்திறப்பட்டு நிற்கும். அஃது தனது முதலிடத்தினின்றுந் தோன்றி இருந்து ஒடுங்கும். அஃது முதனிலை முதலிய குழிகளையும், உதிரப்பைகளையும், உடன்முப்பிணி நீர்களையும், உந்திக்கால் முதலிய காற்றுக்களையும், நரம்பு முதலிய நாணிகளையும் உடைத்தாயிருத்தலால் ஓர் வியன்பொறியாயிற்று.

இவ்வுடல் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்பொறிகளையுடையது. இப்பொறிகள் ஐம்புலனுக்கிருப்பிடங்களாம். அவ்வுடல் வலியுற்று நன்னிலையுறில் அப்பொறி புலன்களும் அந்நிலை பெறும். ஆதலால் இவ்வுடல் வலியை ஆமாறு மெய்முயற்சி மிகவேண்டற்பாலதாம். அவ்வலி நினைப்புக்கருவிக்கு ஊற்றாகிநிற்கும்.

உடலும் குளிர்ச்சி வெம்மைக்குத்தக்கவாறு மாறுதலடைதல் ஒருதலை. ஆதலால் இவ்விரு தன்மையும் ஒத்தவிடத்தில் உறைதல் தகுதியாம். ஓரே ஊரிலேயே இத்தன்மைகள் நிகழ்தற்கிடனுண்டு.

அவ்வுடம்பிற்கு வேறாய் ஊழ்வலியால் அதனுட் சிறைப்பட்டு நின்று கருவிகளை இயக்கும்

அறிவே உயிராம். அவ்வறிவு நனை, செயல் என்னும் இருதிறப்பட்ட ஆற்றல்களைத் தன் மாட்டுடையதாம். இவ்வுயிர் உடலோடு யாக்கப்படாவிடில், தானொரு பொருளென்றறியாதாம். கண்ணுக்கு விளக்குப்போல உடலும் உயிர்க்காம். உயிரறிவு என்னும் யாறு ஐம்பொறிகளென்னுங் கால்கள் வழித்தாய் வெளிச்செல்லும். அங்ஙனம் செல்லாது அதனை நினைப்புக் கருவியின் நிலைக்களத்தில் ஒருங்கு நிறுத்தினும் நிறுத்தலாம்.

அவ்வுயிர்க்கு ஒருபொருளின் அறிவானது அப்பொருளின் பெயரை உணர்த்தும் ஒலியாலுண்டாம். ஈண்டு ஒலி என்றது ஐம்பெரும் நிலையியற்பொருள்களுள் வானத்தை இடனாகக் கொண்டு நிகழும் ஓசையின் தொழிலையன்று. மற்றென்னோவெனில், ஒலிமுதல் வழியினின்றெழுந்த சொல்லொலியை யாமென்க.

அவ்வொலி முதனிலையொலி, மார்பொலி, கழுத்தொலி, வாயொலி என நான்கு திறனுறும். முதனிலைக் களத்தில் அறிவாற்றலை மாத்திரம் பற்றி நிற்கும் ஒலி முதனிலையொலி. மார்பில் மயின்முட்டையுள் ஐந்து நிறமென்ன, எழுத்துருவின்றிப் பொதுப்பொருள் தாங்கி நிற்கும்

ஒலி யார்பொலி; இவ்வொலி ஆயுங்கருவியை அணையுங்கால் பலவித வேறு பாட்டினையுடைய எழுத்தொலியுண்டாம். பின் னுயிர்ப்புக்காலினை மிஞ்சி அவ்வெழுத்தொலி தொடர்மொழிக்குரிய சொல்லாய்க்கழுத்தில் நிற்குங்கால் கழுத்தொலியாம். பிறர் செவிப்புலனுறுவதாய் அவருக்கு உதவி புரிவதாயுமுள்ள சொல்லொலியே வாயொலியாம்.

உயிர்ப்புக்கால் நிற்குநிலையிற் பிரிந்த பத்துப் பாகுடைக்கால்களுள் ஒன்றாகிய உந்திக்காலின் கரிப்பினால் நாமுதலியகருவிகள்தொழிற்பட்டு நிற்றலாற் போந்த அவ்வாய்ச்சொல்லொலியாண்டுஞ் செறிந்துள்ள வானினைத் தாக்கா நிற்கும். அவ்வாறே கேட்போர் செவிப்புலனறிவிற் றொடக்குறும். பின் உட்கருவிக் களத்துட் பொருந்தும்.

அவ்வுட்கருவிகள் நினைப்புக்கருவி, ஆயுங்கருவி, முடிக்குங்கருவி, எழுப்புங்கருவி, என நாற்பாலனவாம்.

முற்கூறிய உயிர்ப்புக்கால்முதனிலைக்களத்திற்றோன்றி உச்சியளவுஞ்சென்று மூக்குவழியாய் ஆறிரண்டுவிரற்கடை புறப்பட்டு, நான்கு விரற்கடை வெளியிற்பாழ்போக எட்டு விரற்

கடை மீண்டுந் தோன்றினவிடத்தி லொடுங்கும். இவ்வுயிர்ப்புக்காலின் இயக்கத்தாற்றான் நினைப்புக்கருவி நினைக்கும். ஆயுக்கருவி ஆயும். அல்லாழி அவை அடங்கி நிற்கும். இவ்வுயிர்ப்புக்காலின்புடைபெயர்ச்சியானும் ஆராய்ச்சியைப் புரிதலை எண்ணார்கடனும். எண்ணின் சார்பின்றிப் போக்கயாவுங் கொள்ளப்படாவாம். ஏனெனில் இவ்வெண்ணினாற்றான் உண்மையறிதல்கூடும். கருதலளவையைத் தனக்கு நிலைக்களமாய்க்கொண்ட இவ்வெண்ணாற் பயிற்சி மிக வேண்டற்பாலதாம். அஃது ஆய்ந்துணரவந்தாறும் அறிவினை யளிக்கும். பேசுதற்கு எடுத்துக் கொண்ட பொருட்குரிய வழிகளை அது நிலைநாட்டா நிற்கும்.

இவ்வேரணப்புலமையை, பல்பொருள்களினறிவிற் பொருத்தி அவைகளின் கண்ணுள்ள பலவேறு ஆற்றல்களையும் ஓரவைக்கண்ணுள்ளார் தெளியுமாறு தன்கோள் நிறுவித் தொடர்மொழி முடிவுகளால் ஒருங்கியிட்டுச் சொன்மாரிபாய்ப் பொழிதற்கு வழிப்படுத்தலாகிய முறைமைகளை இந்நூலெடுத்து மொழிதலால் இதற்குச் "சொற்பொழி வாற்றுப்படை" யென்னும் பெயர் புனைந்துரைக்கப்பட்டது. இச்சொற்பொழி

வர் உணர்வின்பாற்படும் முறைமைப்பாட்டினையுடையதாம். அம்முறைமையினை இளமையிற் கற்றுச் சொல்வன்மை கொண்டு மொழிவதேல் பொன்மலர் நாற்றமுடைத்தாதல் போலாம். இதனைப் பன்முறை பயிறலால் நுண்ணறிவுற்ற சொல்லாற்றலில் முழுநிலை வந்தெய்தும். சிலருக்கு இவ்வாற்றல் இயற்கையி லமைந்துள்ளதாம்."

இச்சொற்பொழிவு புரிதற்குக் கல்வியே இன்றியமையாத கருவியாம். நூல்கள் பலவுளவாதலால் ஆராய்ந்து அமைவுடையவைகளைக் கற்க வேண்டும். கல்வியில்லாது அவைக்கண் பேசலுறுதல் ஊற்றைவாய் அங்காத்தலாய் முடியும். கல்வி கற்றும் அதனை உய்த்துணர்தல் வேண்டும். உய்த்துணர்ந்துஞ் சொல்வன்மை இன்றெனின் என்னை.

அக்கல்வி யாண்டும் சிற்றுயிர்க் குற்ற துணையாதலால் மேற்கோள் நூல், ஒழுங்கியனூல், அளவைநூல், புலமை நூல், வரலாற்றினூல் முதலியவைகளைச் சாந்துணையுங் கற்றல் வேண்டும். அங்ஙனங் கற்றகல்வியை மறவி என்னுங் கள்ளனுக்கு உடையதாக்காமற் காப்பாற்றல் வேண்டும். வருந்திக்கற்றவற்றை நினைவினுள் வையாமல் வேறுங்கற்க முயறல் கையின் கண்ணுள்ள அருமைப்பொருளை நீரினுட்கொட்டிப்பின் வேறு

பொருள்தேட அரிப்பரித்து ஆக்குளய்த்து நிற்றலையொக்கும்.

நினைப்பாற்றலைப் பலவித உழைப்பினால் வளர்த்தல் வேண்டும். அவை,

(1) மனத்திற் பொறிக்கப்பட்ட யாதாயோர் பொருளை நுண்ணிய அறிவோடு உய்த்துணர்தல்.

(2) தொகுத்தும், வகுத்தும் முறைவயின்வைத்தல்.

(3) பன்முறை கூறிப்பயிலல்.

(4) வழி வரவு முறையுணர்ந்து கொள்ளல்.

(5) ஒற்றுமைத் திறனறிந்து நிற்றல்.

(6) எழுதிவைத்துணர்ந்து கொள்ளல் முதலியனவாம்

வைப்பிடை வைத்த பொருளைப் பிறருக்குப் பயன் படுமாறு எடுத்து வழங்கல்போல நினைப்பினுள் வைத்த பொருளையும் அவ்வாறு பயன் படுத்தல்வேண்டும். ஒவ்வொருவரிடத்தும் ஒலி வேறுபட்டு நிற்றல்போல, சொல்வன்மையும் வேறுபட்டு நிற்குமாதலால் உயர்தரச் சொல்வன்மையுடையார் இயற்றிய நூலினைப் படித்துப்பயில்க. அற்றேல் அவர் வன்மைத் திறனில் ஒரு சிறிதேனும் பயப்போர்க்குரிய தாகாமற் போகாது. அன்றியும் அவ்வன்மைத்

திறன் பேச்சவைக்களத்திற் சென்று பலர் பேசு மாற்றை உணர்தலாலுமுறும். அது இனிமை கலந்த மொழித்தொடர்புகளால் அமைந்திருத்தல் நலம்; ஏனெனில் அவ்வினிமைச் சொன்னலம் உரைவழிப்புறங் கேட்டினைக் கெடுக்கும். இதுபற்றி "இன்சொலாலன்றி யிருநீர்வியனுலகம், வன்சொலாலென்றுமகிழாதே" என்றார் பெரியோர்.

இதழ், நா, பல், அண்ணம் என்னும் நால் வகை உறுப்புகளின் புடைபெயர்ச்சிபாற்போந்த வாயொலிச் சொற்றொடர்மொழிகளாய் வெளியுறிப் பேச்சாம். அதனை உரத்து மொழியில் உரைத்தலாகும். பேசலுக்கும் உரைத்தலுக்கும் வேறுபாடுண்டு. பேச்சு, விரிவு, தெளிவு, நேர்மையுடன் கூடியதாயிருக்கும். உரையோ ஊக்கம், அழுத்தம், விரைவு இவைகளுடன் கூடி நிகழும் பேசுவோன் பொருள்களை விளக்கி நிற்பான். உரைப்போன் ஆணைகளைச் செய்ய ஏவி நிற்பான். பேச்சு ஒளிபோலவும் உரை அதன் வளிபோலவுமாம்.

முற்கூறிய உடற்பொறியின் கண்ணுள்ள மார்பிடை உயிர்ப்புப்பையின் கீழ் வளைந்த நடுத்தட்டொன்றுளது அஃது உயிர்ப்புக் காலினை உள்ளே இழுக்குங்கால் வயிற்றுடன் உராஞ்சிநிற

கும். அக்காற்றை வெளிவிடுங்கால் மேற்சென்று முன்னிலை எய்தும். ஏனெனில் அஃது விரிந்து சுருங்குந் தன்மையையுடையது. உயிர்த்தல் வயிற்றினின்றும் உயிர்த்தல், நெஞ்சினின்றும் உயிர்த்தல் என்று இருதிறனுண்டாம். முன்னது வன்மையும், பின்னது மென்மையும் பொருந்தி நிகழும். மிக வழக்கிச்சொல்லவேண்டுங்கால் வயிற்றுயிர்ப்பையும், மற்றுழி நெஞ்சுயிர்ப்பையுங் கொள்ளல்வேண்டும். வயிற்றுயிர்ப்பில் காற்று மிக ஆழத்தினின்றும் உந்தி பெறுவதால் மிகுதியாய்ப்புறப்பட்டு வல்லோசை பயப்பிக்கும். அது பற்றி ஒலிநாண்கள் மிகவலிகொண்டு தாக்கப்படும்.

யாழ் முதலிய இசைக்கருவிகட்கு நாண் ஏற்பட்டு இருத்தல்போல், இவ்வுடற்பொறியில் ஒலிநாண்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்நாண்களை முறுக்கல் நெகிழ்த்தல்களால் தாழ்ந்தமெல்லோசையை எடுத்தல் படுத்தல் செய்யுமாப்போல், உடம்பின் ஒலிநாண்களில் உயிர்க்கிழவன் அருந்தன்மைக்குத் தக்கவாறு முறுக்கல் முதலியவற்றால் உள்ளொலியினை உயர்த்தவுந் தாழ்த்தவுங் கூடும். இவ்வுடலொலி நாண்கள், வளர்ந்து நிமிருமியல்புடைய அரும்பினைப்பொருந்தி யிருக்கின்றன. அவைகள் ஒன்றுபோல் ஒலி

ஒலித்தற்குரியனவைகள். அக்காண்கள் கழுத்தில் ஒலிதங்குமிடம் பொருந்தி இணைக்கப்பெற்றிருக்கின்றன. அப்பை காற்றாட்டுங்கருவி வாய்வைக்கப் பெற்றுள்ளது. இஃது இன்னனமாக, நாம் இயல்பிற்பேசுவோம், நடுநிலைஒலி. ஊக்கிப்பேசுமொலி. எடுத்தலொலி. தாழ்த்திப் பேசுமொலிபடுத்தலொலி. இவ்வெடுத்தல் படுத்தல்களினின்றும் திருப்பி வைக்கிற்போது நிலை, நடுநிலையாதலால் மகன்கொடுக்குங்கால் இந்நடுநிலை ஒலியிற் பேசவேண்டும் ஏனெனில் அஃது ஒரே சீர்மை தரிப்பாகாதும். இவ்வொலியானவும் மிகக்குறைந்த ஒலி குறைந்த ஒலி, நடுநிலை ஒலி, உயர்ந்த ஒலி, மிக வுயர்ந்த ஒலி எனப் பகுக்கப்படும் எடுத்தல், படுத்தல்கள் ஒலி வழியின் அதிர்ச்சியாலில் நிகழும். இவ்வதிர்ச்சி முறுக்குகளில் மிகுந்தும் படுத்தலிற் குறைந்தும் நிலவும்.

இடத்திற்கேற்ப ஒலிகளைத் தெரிந்தெடுப்பதில் மிக்கறிவு செலுத்தவேண்டும். களிப்புமொழியினை எடுத்தலொலியினும், துன்பமொழியினைப் படுத்தலொலியினும் பேசவேண்டும். அன்றியும் ஒருதொடர்மொழி முடிவின் முதற்பங்கு எடுத்தலாலும், பிறபங்கு படுத்தலாலும் மொழியப்படவேண்டும்.

உதாரணமாக:—

(1) எடுத்தல்	படுத்தல்
மேற்றிசையில் தோற்றம்	மேலுக்குப் பம்பாயானை
(2) (அ) பொருந்தியாற்றல்	(ப) மிகுந்த வெள்ளம் வருகின்றது.

இன்னவின்னதை எடுத்தும் இன்னவின்னதைப் படுத்தும் கூறவேண்டும் என்பதை அடியில் வருமாறு காண்க

எடுத்தலால் மொழிய வேணடும்	படுத்தலால் மொழிய வேணடும்.
1. தொடர்மொழி முடிவின் முற்பகுதியை	அம்முடிவின் பிற்பகுதியை
2. கட்டளையாய்ச் சொல்ல வேண்டும் மொழிகளை	உறுதியாய் அழுத்த வேண்டும் மொழிகளை
3. இன்னது இப்படி இருந்தால் என்பதை	உண்மையைத் தெளிவுபடுத்தும் சொற்களை
4. களிப்பை	துன்பத்தை
5. வெற்றியை	தோல்வியை.
6. எதிர்த்தலை	பணிதலை.
7. சினத்தை	அமைதியை.
8. வெறுப்பை	விருப்பை.
9. உயர்வை	தாழ்வை.
10. பொய்யை	மெய்யை.
11. கிளர்ச்சியை	வேசாறலை.

ஈண்டுக் கூறியவைகளைக்கொண்டு கூறாதவற்றையு முணர்க.

இனி மொழிகளை நன்குசொல்லுக. அல்லாக்கால் கருத்து வேறுபடும். குன்றிய பேச்சு,

வாயை நன்குதிறவாமை, உதடுகள்போன வழியசையவிடல், நரம்புகளை அடக்கமுடியாமை, மேலுதடு வலித்தல், விரைந்து மொழிதல் முதலியவைகளா லாகும்.

அசைகளை நன்குறியச் சொல்லவேண்டும். ஓசையைத் தள்ளிவிடாது அடக்கியாள வேண்டும். ஒரு இசை முறையினின்றும் மற்றொரு இசைமுறைக்குப் பேசுவோன் செல்லுமாற்றைத் தேர்தல்வேண்டும். ஏனெனில் அவனது கருத்தை அவ்விசைமுறை காட்டலாலும் கேட்போர்களையும் அறியுந்தகுதியும் பயத்தலாலு மென்க. அழுத்திச்சொல்லல் சொல்லுந் தொடர்மொழி முடிவினை உண்மைக்கருத்தையுணர்த்தும். இசைநடை குறைத்தல், இசைநடையுயர்த்தல், முன்னிறுத்தல், பின்னிறுத்தல், முன்பின்னிறுத்தல், ஓசையை உயர்த்தல், அதனைக்குறைத்தல், முடுக்காய் மொழிதல் முதலியன வேண்டும். ஓசையை அழுத்தி யொலிக்க வேண்டும்.

பேசுங்கால் நிறுத்தும் வயின் நிறுத்திப் பேசுதற்கு ஆற்றல் மிகவேண்டும். இவ்வாறு இடையிட்டு ஓசை நிறுத்திப்பேசல் அவையோரை மெய்மறந்திருக்கச்செய்யும். ஓசைநின்றபோது உடலசைவு நிற்கும். சொற்பொழிவுக்கு தெளிவு, விரைவு, கிளர்ச்சி முதலியன மிகவேண்டற்பாலதாம். கிளர்ச்சிசொல்லும் வலியோடுபட, அவ்வலி மொழிகளுக்கு ஊடுருவி நின்றுஞ் செல்லும்.

மொழிநடையானது பேசுவோன் மனத் தொடர்மொழிமுடிவில்லூக்கமுங் கருத்துமுறப் பேசுகின்றமையையுந் தெரிவிக்கும். மெது வாய்ப் பேசிப்பின் விரைந்தமொழி நடையிற் பேசில் அவ்விரைந்த மொழி நடையிலடங்கிய மொழிகள் ஏற்றமுடையனவென்பதைக்குறித்து நிற்கும். ஒருமொழிநடையினின்று மற்றொரு மொழிநடைக்கு மாறும்போது அழகினைப்பயக்கும். தெளிந்த உணர்வு, அளவை அறிவு, மேம்பட்டபொருள், ஆழ்ந்தஆராய்ச்சி, பின்னுறுதகிளர்ச்சி, நாவினால் நன்கு நவிலல், கண்டப்பரத்தல், தோற்றுவாய் முடிவுகாட்டல், ஊக்கி எழுப்பல், தன் கருத்திணங்குறச்செய்தல் முதலியன சொல்லாற்றலுக்குண்டு. இவ்வாற்றல் உடல்நிலைக்குத் தக்கவாறு நிகழும்.

சொற்பொழியுந் திறன் ஒருவனுக் குறுமேல் மற்றவை அவன் வருந்தாது பொருந்தி விடும். கல்வி மிகுதியும், அளக்கமுடியாக் கருத்தும், மொழிவளமும் ஒருவனுக்கமைந்திருந்த போதினும் சொற்பொழியும் வலியொன்றிலனேல் அவன் அவைச்சிறப்படையான். அளந்த அளவில் நடைபெறும் சொற்பொழிவு மேற்பேசுதற் குரியமொழிகளை இழுத்தற்கும், தெரிந்தெடுத்ததற்கும் ஏற்றதாம்.

சொற்பொழிவுறுதற்குப்பதின்மொழிவைத்தல், வரையறைத்தொடர்மொழிமுடிவினைப்படித்துப் பின் பாராதெழுதல், ஒருதொடர்மொழி முடிவினை வேறுமொழி கொண்டு கருத்துப்பிசகாது திருப்பி எழுதல் முதலியவைகளில் நன்கு பயிற்சி வேண்டும்.

II பேசப்பயிலுமுறையியல்.

பொருளியல்புகளை எழுதிவைத்துப்படித்தல் பேச்சுப்பயிலுதற்கு மிகச்சிறப்புடையதாம். ஆனால் அம்முறையைச் சின்னாளில் அறவே விட்டு விடல் வேண்டும். ஏனெனில் அவையோர் அதன்கண் கருத்துக்கள் செலுத்தாது படிக்கப்படவேண்டிய இதழ்கள் எத்தனையிருக்கின்றன வென்பதை எண்ண முயலுவார்களேயன்றிப் பயன் நன்கு பெறார்கள். சிலர் இம்முறையுங் கொள்ளற்பால தென்பர்.

பேசப்பயிலுவோன் பேசும் பொருளியல்பைத் தன்னுள் முறைவயின் வைத்துக்கொள்ள நன்கு பழகல் வேண்டும். அத்துணை ஆற்றலுறற்கு அமைக்கப்பெற்றுள்ள பற்பலசிறுகழகங்களிற் பயின்று கொள்ளல் நலம். ஏனெனில் அறையிலாடிப்பின் அவையிலாடுதல் சால்புடைத்தாம். முயற்சி ஆக்கத்தினையாக்கும். பயிற்சி தகைமை தரும். அஃது உறுதிப்பாட்டினை நிறுத்தும்.

உடல்நடுங்கல், வாய்குழறல், அவையஞ்சி உட்கார்தல், தன்கோண்மறத்தல், பொருட்டொடர்பு முறித்தல், தன்கருத்து வெளியிடப் பின்னிடல், திகைத்தல், துணைதேடல், மற்றொன்று விரித்தல், வெற்றெனத்தொடுத்தல், அவையுணர் வறியுமாபலவி, வெசாறல், நாணல், பயங்கொள்ளல், வேர்க்கிற்றல், சொல் விழுங்கல், உதடுகட்டல், வாய் வலித்தல், கூறியது கூறல், முடிவிடங்காணாதுநிற்றல், நுதலிய பொருண்மறத்தல், அதனைத்தேடல், மயங்கி வீழ்தல் முதலிய தீத்தன்மைகள் முதன் முதல் அவைக்கண் பேசமுயலுங்காற் பேசுவோரிடம் பொருந்தி நிகழ்வனவாம். இவைகள் பேசு முயற்சியில் இடைவிடாது செய்யும்பயிற்சியால் நீங்குவனவாம். அங்ஙனம் பயிலில், பொருளைக்கட்டென்று தெளிவு, ஓசை, தன்னுரிமையென்னும் இவைகளோடு கூடிய பேச்சுப் பேசுமாற்றல் வந்துறும். பேசப்பயிலுமுன், பேச்சிற்குரிய முதற்கருவி கண்ணிடத்துள்ள தாயினும் பேச்சினைப்பயிலவோன் கண்ணுநிலை கடந்து ஓர் அவையிற் பேசத்துணியில் அஃது அவனைத் தடுமாற்றத்தில் வீழ்க்கும்.

சிலர் பேசுதற்கு முன் சிற்சில நாட்களைப் படித்த அவைகளினின்று பெற்ற அறிவுகொண்டு உடனே நன்குபேச முயலுகின்றனர். பேசப்படும்

பொருளின்றன்மை பேசமுயல்வோன் உட்கருவிக்களத்துள் உறுதிபெறுமையால் அவையோர் அதனைக் கோடலிற்பின்னிட்டு இறைகொள்ளாதிருப்பர். அதுபற்றி அம்முறை விட்டொழிக. பேசமுயல்வோன் அவையோரைமுதற்கண் குழந்தைகளாகவும், அவன் அளவை நூற்றிறன்காட்டிப்பேசுங்கால் மாணவர்களாகவும் முடிவில் தன் கல்வி நிலை முழுதுங் கண்டவர்களாகவும் எண்ணக்கடவன்.

III பேச்சுமுறையியல்.

பேச்சாளன் பெரிதுமுய்வான். ஆயினும் குற்றங்கள் செறியாது பத்தழகின் நலங்கள் மிகச்செறிந்து நிற்கப்பேசவேண்டும். பிறர்குறை கூறலும் அவை மிஞ்சிநிற்றலுமாகாவாம். ஏனெனில் அவை தனக்கோர் இழிதகைமைதந்து நிற்பனவாம்; அன்றியும் அறிவின் மிக்கார்பலரும்குறை கூறுநிற்பர். தான் முற்றுங்கற்றதாக எண்ணிகளியாது அவைக்கணுள்ளாரை முற்றுங் கற்றவர்களாக நோக்கிக்கருதுக.

அவைக்கு ஏற்றாங்கு உய்த்துணர்ந்துகூறும் வன்மை இன்றெனின் ஆங்கு அவன் நாவலிமையாவும் விழலுக்கிறைத்த நீர்போலாம். பேச ஏற்

படுத்திய பொருளை முன்னரே ஒழுங்கு படுத்தி யுணர்ந்துகொண்டு நேரம், இடம், செயல் முதலிய வற்றிற்கு இணங்கத் தெளிந்த மெல்லிய மொழி களால் தான் எண்ணியாங்கு பிறர் உணருமாறு முட்டின்றி மொழிதல்வேண்டும்.

பொருளை ஒழுங்குபண்ணி, பாடமாகப் படித்து ஒப்புவிக்கற்கு முயலின் மறதி யூடுருவி நின்று இடர்ப்படுத்தலுடன் தனக்கு வேண்டுழி ஊற்றாகாது கழிந்தொழியும். வேறொன்றை விரித்துக் கூறுமாறு கேட்கில் சொல்லுமாற் றலில் மெலிகுன்றியு நிற்கும் அதுபற்றி அம்முறை கைவிடுக. இயற்கைச் சொல்லாற் றலிற் பயின்று ஊற்றின் வாய் நின்று நீர்ஊறுதல் போலவும், ஓர் பறவை பறந்து செல்வதைப்போலவும். தன் கருத் தும் மொழியும் இடையறாதுதொடர்ந்து செல்லு மாறு பேசுக. அங்ஙனம் பேசுவதில் பாய்மாஊர் வானொருவன் அதன் வாய்க்கயிற்றை எவ்வாறு இழுத்து நிறுத்தி நடுநிலையாய் ஓட்டுவானோ அவ் வாறே பேசுவோன் அளவைமுறையிற் பொருளை நிறுத்தித் தான் கொண்ட கொள்கையைப் புக லிற் பெரியதோர் அவையுங் கருத்தினிற் றன்வய முறும்.

தொண்டையாற் பேசுவதினும் மார்பாற்

பேசுதல் மணியோசைபோலநீடித்தொலித்துநிற்கும். பிறர்கேட்கப்பேசுதல், ஓசையையும், அவ்வோசைவழிசொல் மொழியுமுறைமையையும் பொறுத்துநிகழும். ஒருதொடர்மொழிமுடிவின் கடைமொழியை நன்குமொழியாவிடில் சொற்பொருள் வேறுபட்டு இடர்ப்படுத்தும். பேசும்போது சொற்களை நினைப்புக்கருவியின் வேகத்திற் கூட்டி நின்று வரையறுத்து உரத்த ஓசையொடுஞ்சொல்லுக. அவ்வாறு சொல்லுந்துணிவு நீண்ட காலப்பயிற்சியால் வந்தெய்தும். அங்ஙனம் பயிற்சியுடையாரும் இடைவிட்டுப்பேசலைக்காண்கின்றும்.

மிகவுரக்கப் பேசுதலும் மிக மெதுவாய்ப் பேசுதலும் வெறுப்பை விளைத்து நிற்கும். ஆதலால் நடுநிலையான ஓசையிற் பேசுக. அஃது தன் கருத்துத்தொடர்ந்துவருவதற்கும் அவையோர் கருத்தை இழுத்தற்கும் ஏற்றதாம்.

தெளிவு, இன்னோசை,கிளர்ச்சிமுதலியநலங்கள் செறிந்துபேசுதற்கும், மயக்கம், வல்லோசை கோழைத்தன முதலிய வற்றோடு பேசுதற்குமுள்ள வேறுபாடு, உயிருள்ள உடலுக்கும் உயிரில்லா வுடலுக்குமுள்ளவேறு பாட்டினை ஒத்த

பேசுங்கால் நிகழுங் கையடையாளங்கள் பேசுவோன் கருத்தையுணர்த்தும் வெளிக்குறிப்புகளேயாம். அவைபேச்சுக்கு ஆற்றலையும், ஊக்கத்தையும், அழகையுந்தருவனவாம். எம்மட்டில் இக்குறிப்புகளை ஆளப்படவேண்டுமோ அம்மட்டில் ஆளவேண்டும். அவைபேசுவோன் கருத்திலுள்ள உண்மையை, கேட்போருள்ளத்தும் நிலைநிறுத்தத்தக்கனவாயிருத்தல் நலம். அமைதியும், சுறுசுறுப்பும், ஆன்றமொழியும், தெரித்த பொருளுடைய பொறுப்புச் சொல்லும் இக்குறிப்புகளை சிறக்கச்செய்வனவாம்.

பின்னடிவாங்கலும், மீண்டுவரலும், கைகளை உயர்த்துதலும், சுற்றலும், விரல்களைஉயர்த்திக்காட்டலும், நீட்டிச்சுட்டலும், அவைகளைப்பின்னலும், ஓங்கி நாற்காலிமேல் அறைதலும், ஒரு பொருளைக் கையிற்றூக்கிக்கொள்ளலும், பின்னதனைக் கீழே விடலும், அதனைப்பார்த்தலும். தலைக்குனிந்து பேசலும் கூடாவாம். ஆனால் சிற்சிலவமையங்களில் முழங்கையை மடக்கி முன்னீட்டலும் அவையோரைக்கேள்விகேட்குங்கால் உள்ளங்கையை ஒருபுறமாய்கொஞ்சம் உயர்த்தி நீட்டலும் வேண்டற்பாலதாம்.

உண்மையும் மென்மையுமார்ந்த இயற்கை மொழிகளும், பிறரைத்தாக்குதலின்மை, ஊக்கம்,

சுருசுருப்பு முதலியன வாய்ந்த மொழிகளும் உள்ளவன் எவனோ அவன் மேலான சொல்வன்மை யுடையவனும்.

தான் எடுத்துக்கொண்ட பொருளின் விரிவுகளை எல்லாம் அன்றே முடித்துவிட வேண்டுமென்று எண்ணல் தகாது. அன்றைக் கேற்ப வேண்டுவன சுருங்கச்சொல்லி முடித்தல் நலம். மறைபொருள், அறியாமை சார்ந்த மொழிகளைப் பேணாது விடுக.

ஒருபொருளுக்குரிய சார்புகள்யாவும் ஒழுங்குபட உள்ளக்கிளர்ச்சியோடு ஒருங்கே மொழியப்படின் அவையோர்க்கு அது வியப்பினை விளைவிக்கா நிற்பதன்றி பேசுவோன் கருத்துக்குந் துணை புரிந்து நிற்பதாகும்

ஊர்வழிச்செல்வான் ஒருவனுக்கு விளங்க ஒற்றையடித்தடத்தைக் காட்டுவதினும் பெரிய நேர் வழியினைக்காட்டல் பேர்ப்பாடுடைத்தாதல் போல, வினாமொழி, ஐயமொழி முதலியவைகளை நீக்கி ஆற்றொழுக்காய்ப் பேசல்நலமாம்

பேசுமாறு கொடுத்த பொருளினை மாத்திரம் ஐயந்திரிபறத் தெளிவாய்ச் சொல்லத் துணிதலன்றி வேறு ஆண்டைக்குவேண்டாத பொருளி

ளைவிரித்து மொழிந்து நேரம்போக்க முயலல் இழி தகைமைதரும்.

ஒருமுறையான உயர்த்தல் படுத்தல் பொருந்தும் மொழித்தொடர்புகளால் மொழிதல், கேட்போர் உள்ளத்திற் பொருளினை நன்கு நிலைநாட்டும். பேசுவோன் ஆன்ற அறிவுடையவனாயிருந்தபோதினும், நூல், கிழி, முதலியன எழுதுவோர் எழுதும்பொருளை மதித்துப் பின் எழுதுமாப்போலப் பேசும் பொருண்முறையை உணர்ந்து நினைப்பிடை வைத்துக்கொள்ள வேண்டும். அங்ஙனம் வைத்துச்சொல்லில் நவின்றோர்க்கு இனிமைபுணர்த்தும். இறையிடத்தீடுபட்டார்க்கு அவ்வகை முன் முயற்சிகள் வேண்டா.

ஆழ்ந்தகருத்தின்றிப் பேசுவதினும் ஊமையாயிருத்தல் நலம். பேசவேண்டிய பொருளினை முறைப்படுத்தித் தன்னந்தனியனாயிருந்துகொண்டு சொல்லிப்பயிலுதல் நலம். அவ்வாறு பயிலிற் பொருளினையறிதலோடு சொல்லாற்றலையும் எய்துகிறான். ஒருதரம் பேசுமுன் இருதரம் நினைத்தல் நலம். படபடப்புக்கொள்ளாது அமைந்து நின்று பேசலும் சிரிப்பாரைப் பாராது முயற்சியில் ஊன்றிநிற்றலும் நெஞ்சின் உரத்தைக்காட்டும்.

நன்கு வற்புறுத்திச் சொல்லவேண்டியது ஒன்றுண்டேல், அதனைப் பலவேறு மொழிகளாற் பற்பலவமையங்களிற் குறிப்பிட்டுக் கூறல்வேண்டுமே தவிர, முன்சொன்ன பொருட்டொகுதிகளையே திரும்பத் திரும்பச் சொல்ல முயலல் அவையோர் உள்ளக்கிளர்ச்சியைக் கீழ்ப்படுத்தி நிற்கும்.

பேசுங்கால் தன்னறிவுமுதிர்ச்சி விளங்குமாறு எண்முறை வைத்து அவையத்துக்கேற்ற தெளிந்தமொழிகளாற் பேசிக்கேட்போர் உள்ளத்தைக் கவர்தல்நலம். சிறியதோர் ஆடியுள்பெரியதோர் பனை காட்டல்போல் ஓசையுடைய ஆணிமொழிகளாற் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் கருப்பொருள்காட்டக் கூடியதாயிருக்கும். ஒரு பறவை தன் சிறகுகளை அடித்துக்கொண்டு நடுநிலைமுறையிற் பறந்து செல்லல் போலப்பேசுவோனுஞ் செல்லவேண்டுமே தவிர, இடி இடித்தாற்போலப்பேசித் திடீரென்று நடுவில் நிறுத்திவிடலாகாது. அவ்வாறு நிறுத்தாமை இபற்கையறிவின் நிலைகாட்டும்.

ஒரு பொருளின் பொது முறை விரித்துக் கூறியபின் சிறப்பியல் காட்டவேண்டும். அது இப்பியைக்காட்டிப் பின் முத்தினைக்காட்டல்போலாம்.

அவையோர்களிற் சிலர் கேட்பதில் ஆவலின்றி யிருப்பரேல் அவர் தொடர்புற்றன சிற்சில பேசில் ஆவலுடையராகிறார். தன்றன்மையறியாக்கழகத்தில் தன் பேச்சு ஏறாதிருப்பின் தீப்பொறிகள்போன்ற வார்த்தைகளைக் கொண்டுமேற்கோள்காட்டிச் சுறுசுறுப்பாய் மொழியில் அவர் பேசும் வார்த்தைகளைக் கேட்குனராவார். அவையோர் தன் பேச்சைக் குறித்து நின்று கருதவேண்டுமென்று வேண்டுகோள் செய்பலாகாது.

பேசும்போது வெளியிலுறுஞ் செயல்களைக் கருதாது நின்றநிலையினின்றே பேசவேண்டும்.

இசைபாடுதல்போலப் பேசாது மெல்லிய வோசையாற் கேட்போர் உள்ளங்கரைந்து கண்ணீர் பெருகியோடுமாறு பேசுக. ஓசை நயங் காட்டல், ஒருமுறைபற்றி தெளிவானசொல்லாற்றல்கொண்டு மொழிதல், உட்கருப்பொருளுரைத்தல், அன்பு செலுத்தல், நினைத்தாங்கு பேசல், கடைமொழி விழுங்காது பேசல், அளவைத் திறன்காட்டல், நன்மொழிபொருத்திக்காட்டல், ஐயமொழி விலக்கல், அழுத்திக்கூறல், உறுதி தோற்றுவித்தல், பணிவுகாட்டல், புதுமைப் பொருள்புகலல், ஏற்புழிக்கோடல், அணிந்துரைகொள்ளல், பேச்சின் பயனுறச்செய்தல், அறுதியிட்டறைதல், கொண்டு

கூட்டி பொழிதல் என்பனபோன்ற பல நலங்களுஞ் செறிந்துநிலவ உள்ளக்கிளர்ச்சியோடேஉரைத்தல்வேண்டும்.

பேச்சிற்குயிராகிய ஒப்புமையணி முதலிய அணிநலங்கள் பொருந்தவுரைக்கில் யாவருக்கும் இன்பம் பயிப்பிக்கும். அவை அவையோர்கருத்துக்கேருதனவற்றையும் ஏற்றித்திரும்பத்திரும்ப நினைக்குமாறு செய்வனவாம்.

சுருங்கச்சொல்லில் உயர்தரப் படிப்பாளியின் பேச்சு அழகழகான மொழிகள் செறிந்ததாய் அடுத்ததுகாட்டும் ஆடிபோல் இனிது விளக்கித் திட்பநுட்பம் சிறந்து நிலவும். அன்றியும் இரும்பைக்காந்த மிழுத்தாற்போல் இயைந்துநின்று இழுத்தல்வேண்டும்.

IV. பேசுவோனியல்.

நினைப்பாற்றல், பயிற்சி, பொருளுணர்ச்சி, தேர்ச்சிமுதலியவற்றையுடையவன் நன்னாவலனாம். இவன் தன்கருத்துக்களை நன்குபுலப்படுத்துவானாதலினால் இவனது சொற்பொழிவை யாவருங் கேட்குந்தகுதியுடையதாம். அவன்பேசும் பொருட்கு அவனே பொறுப்புடையவனாவன். அவன் பேச்சும் மேலான நன்மை விளைவிக்கு மாற்றல் பொருந்தி நிகழும். கற்க முடியாத இறையறிவும் அவன்பாற்படும். நிற்க,

செந்தமிழ்ப்புலவர் செய்யுள் செய்வோர், பொருள்விரிப்போர், பிறர்கோண்மறுப்போர், வீட்டுநெறியுரைப்போர்எனநாற்றிறத்தினராவர் இவருள்

சொற்பொழிவோன் உண்மைநெறியுரைப்போனுவன். அன்றியுமிவன், வழி, வரவு, போருள், மேற்கோள் முதலியன எடுத்துக் கூறிப்பிறன் கோண்மறுத்துத்தன்கோணிறுவுவோனுமாவன் ஒரு பெருங்கூட்டம், பெரியதோர் வழக்கு முறையில் இவன்பேசலால் தன்பாலொன்றினிற்கு மாறுசெய்யு மாற்றலுடையவனே பேசுதற்குரியவனுவன். பேச்சுக்குரிய கருவிகள் இயற்கையில் நன்கமைந்திருத்தல் நலம். அல்லாவிடில் மருந்துகளாற் சீர்செய்தல்வேண்டும்.

ஒழுக்கம் விழுப்பந்தருமாதலால் அதனை உயிரினும் ஓம்பிக்கொள்பவன் மேம்படு பேச்சாளியாம். அவனே மக்கட்பிறவியிலுட்படுபவனும். அவனே பிறரைக்கவர்பவனும். நன்னடையுடையவனே நல்லெண்ணமுடையவனும். இவன் சிற்சிலமொழிவதில் தவறினும் அவையோர் கருதாது விடுப்பர். தான்பேசியதற்கு மாருய் நடப்பவன் நன்கு மதிக்கப்படான்.

சிறுகிய செலவிற் பெரும்பயன் பலிப்பிக்குமாப்போல, சுருங்கிய சொல்லாற்கேட்போரைப் பெரியதோர் நலத்துட்புகுத்திவிடலாம். அவையில் தான் சொன்னவற்றிற்கு யாரேனும் மறுதலை பேசில், அதுதான் அமையாதென்றுகண்டு அவை

யோரறியுமாறு அளவைத்திறன் கொண்டு பேசி எதிர் தோல்வியடையுமாறுசெய்க. அங்ஙனமாயின் அவையோர் நன்குமதிப்பார்கள்.

தான் எண்ணியதைச் சொல்லமுடியாமலும் முன் சொன்னதை மீண்டுந்தெரிய முடியாமலு மிருப்பின் அவையோர் குற்றங்காண்பர். ஆகையால் இயற்கை நல்லறிவு கொண்டு இயம்புக.

பேசப்புகுமுன் அவை எங்கு எவ்வாறு யாவரால் நடத்தப்பெறுமென்பதையும், ஆங்குப் பேசுவோர் யார்யார் என்பதையும், எவ்வெப்பொருள்கள் பேசப்பெறும் என்பதையும் நன்கறிந்து கொள்ளவேண்டும்.

பேசுவோன் சிறுகியபாவால் தெய்வம் வழிபட்டு சுருங்கிய அவையடக்கங்கூறி நேர வரையறை கடவாது களிப்புங் கிளர்ச்சியுங் கொண்டு பேசவேண்டும். நேரவெல்லை கடந்து பேசில் பின் பேசவருவோர் ஒழுங்குபடுத்தி வைத்திருந்த பொருளறிவு தடுமாறிப்போம். அதுபற்றி அவர்கள் ஊக்கமுங்கெட்டு மீண்டுமோர் அவைக்குச் செல்லும் விருப்பமுமிலராகுவர்.

முன்னர்ப்பேசுவோன் உரத்துப் பேசினனாகில்பின்பேசுவோனும் அவ்வாறேபேசுக. அல்லாவழி அவையோர்க்கு நற்பொருளுங் குறைந்துகாட்டும்,

ஒருமொழி வெல்லும்; மறுமொழி கொல்லும். ஆதலால் ஒருவருக்கும் தீங்கினை உன்னாத ஆன்ற மொழிகளையே ஆண்டு கொண்டு பேசுக. அஃது பல நலந்தரும். அம்மொழிகொண்டு பேசுதல் ஒழுக்கம், உறுதி, தேர்ச்சி முதலியவைகளைக் காட்டும்.

தாமொருமேற்கோள் காட்டவேண்டில் அமையத்திற்கேற்ற தொன்றை எடுத்துக் கூறுக. ஒருபொருளை உயர்த்திக்காட்டவேண்டுமேல்மேற்கோளும் உயர்ந்தபொருள்கொண்டதாயும், தாழ்த்திக்காட்டவேண்டுமேல் மேற்கோள் தாழ்ந்தபொருள் கொண்டதாயுமிருத்தல் நலம்.

அவையில் எவரையுந் தாழ்த்திப் பேசலாகாது.(ஏனெனில் அது அவர்க்குச்சினம்), இழிவு முதலியவற்றை யுண்டாக்கும். உயர்த்திப் பேசவேண்டுமேல் தனக்கு ஒப்பு உயர்வு உள்ளாரைக் குறித்துப்பேசுக. அல்லாக்கால் ஒருவரையும் புகழ்ந்தேனும் இகழ்ந்தேனும் பேசற்க. புகழ்ச்சி உவப்பினு முவப்பிக்கும். இகழ்ச்சி கணைபோல நெஞ்சினுள் ஊடுருவிப்பாயும். அவையினுட் சிறுபாலார்க்கு மாத்திரம் நெஞ்சநோவுண்டுபண்ணுபவன் உயர்தரப்பேச்சாளியாம்.

பேசுவோன் யான் என்று செருக்குடனில்லாது தாழ்வெனுந்தன்மைகொண்டு, நிற்குந்தோற்றத்தாலும் சொல்லும் மொழியாலும் அவையோரைத் தன் மாட்டிழுத்தல் வேண்டும்.

பேசுவோரிற் சிலர் ஒருவனுக்குஞ் சொல்லும் வன்மையிலராகி ஒரு பேரவைக்குச் சொல்லும் தகுதியுடையாராயிருப்பர். சிலர் இதற்குமாறும் நிலைகொள்வர்.

நீரோடுங்காலொன்றைப் பலபிரிவுகளாய்ச் செய்யில் நீர்விரைவும் ஆழ்ந்து மோடாதாம். அதுபோல பேசுவோன் தன்னறிவைப் பலவாறு செலுத்தில் ஊக்கமுங் கிளர்ச்சியுங் குறைந்துகாட்டும். ஆதலால் அங்ஙனம் செலுத்தாதொழிக.

பேசுந்தன்மையில் மிகத் தேர்ந்தவர்கள் எப்பொருளையும் எந்த வேளையிலும் புதிதும் மேன்மையும் பொருந்திய கருத்துக்களுடன் எளிய நடையில் மொழியுமாற்றலுடையவர்களாயிருக்கிறார்கள். சிலர்க்குச் சொல்லுந் தகுதியிருந்தும் துணிவுகொள்ளவில்லை. வேறு சிலர்க்குப் பேச்சால் பிறரைக் கவருமாற்றலில்லை.

தகுதியற்ற ஒரு பொருளை நிலைநாட்டுமாறு பெரியதோர் ஆற்றலோடு பேசுவானாகில் அப்பேச்சு கேட்போரை கீழே வீழ்த்திவிடும்.

பேசுவோன் கேட்போர்க்கெல்லாம் அருகிலிருக்கும்படியான விடத்தில் நின்று மொழியில் அப்பேச்சின்பயன் அவையோரைக் கிட்டி அவர்களை ஊக்கி எழுப்பி நிற்கும். தூரத்தில் நிற்கில் அப்பேச்சு பயன் பயப்பியாது. பேசுவோன் தான் நிற்கும் நிலைக்குச் சுற்றிலுள்ள எல்லாவிடங்களையும் பார்த்தே பேசவேண்டும். அவையோர் தலைகளுக்கு மேலேயே இவன் பார்வை நிற்கவேண்டும்.

பேசுவோன் உளக்கிடைக்குறிப்பு ஒன்றாயிருக்க அவன் மற்றொன்றைச் சுட்டி நின்றும் பேசலாம்.

ஒரு பருந்து வானில் கொஞ்சநேரம் சிறகாட்டியும் சிறிது நேரம் சிறகாட்டாமலும் பறந்து செல்லுமாப்போல, பேசுவோனும் முதலில் நடுநிலையில் நின்றும் பின் படபடப்பாய்ப் போதல் நலம். இருளில் மின்வெட்டினாற்போல, பொருள்களை விரித்துக் கூறவேண்டும்.

பேசும்போது பல பாக்களை யெடுத்து மொழிந்து அவைகளின் கண்ணுள்ள மொழிப பொருள் விரித்துக்கூறி நேரம் போக்கலாகாது. காலந்தப்பிப் பேசலுங்கூடாது. கடையிற்பேசுவோன் சுருங்கப்பேசவேண்டும். அல்லாக்கால்

அவையோர் கலைந்து செல்லுவார்கள். அவைத் தலைவர் பேசி முடித்த பின்னும் பேசலாகாது.

எவரையுங் கவருந்தோற்றம், கேட்டற்குரிய ஓசை, இனிமை, சொல்வன்மை, இழுக்கும்வலி, இயற்கைமொழியாற்றல், அவையறிவு அறியுமாற்றல், அளவைத்திறன் பொருந்திநிற்றல், அறிவுநிறைந்த பொருளுடைமை, தடுமாற்றமின்மை, தெளிவு, உறுதிவரையறைக் கருத்துடைமை முதலிய தன்மைகள் பேசுவோனிடம் நன்குபொருந்தி நிலவவேண்டும்.

இவைகளையொத்த பலமுறைகளைப் பேசுவோர் பெரிதுங்கருதுவாராக.

V. பேசும்பொருளியல்.

பேசும்பொருள் மக்கட் பிறப்பிற் பிறந்தாரொருவன் அடையவேண்டுவனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள் ஒன்றைப் பற்றியே இருத்தல்வேண்டும். அவையோர் விருப்பமுறும் பொருளினைப் பேசல் நலம். அல்லது தான் முன்னரே தெரிவித்து நின்ற பொருளினைபபற்றிப்பேசல் நலம் அப்பொருளையும் வேண்டிய அளவுதான் கூறல்வேண்டும். ஏனெனில் அதிகப்பட்டால் இனிமை தங்கிய அருமருந்தும் நஞ்சாமென்க.

VI. அவையோர் நிலையியல்.

பேசுவோனுக்கு அவையோர் நெஞ்சமே நிலமாம். அவன் சொல்லுங்கருத்தே விதையாம். அவன் இனிமை சார்ந்த மொழியே நன்னீராம். நெஞ்சினுட் பலிக்கும் பயனே கனியாம். அக்கனியருந்துபவன் பறவையாம்.

அவையோர் பெரும்பாலும் கற்றவர்களாகவேயிருத்தல்வேண்டும். ஏனெனில் அவர்கள் தான் பேச்சின்வழியே பின்பற்றிச்செல்லத்தக்கவர்கள். பேசுவோன் பேச்சினை அவையோர் நன்குகருதிக் கேட்கவேண்டும். அல்லாக்காற் பொருள்முடிவு குறைந்துகாட்டும். அவையோர்

நன்கு கேட்கும்வரை பேச்சும் விரைந்து செல்லாது. நன்றாகப்பேசும்போது அவையோர் தூங்கலாகாது. சிரித்தல்முதலிய தீக்குணங்கள்பொருந்தாதிருக்கவேண்டும். பேச்சினைக்கேட்டு முடிந்தவுடன் அவையோர்நிலை முன்னிருந்த நிலையினும் மாறுதலுடையதா*யிருக்கும். தெளிந்த உள்ளக்கிளர்ச்சியும் அவர்களுக்கெழும். கல்வியறிவுற்ற பல சொற்பொழிவினைக் கேட்டோர் உயர்தரக் கல்வியாளராகின்றனர்.

VII. பேச்சின் பயனியல்.

செயல்கள் யாவும் பயன்றருமாப்போல் பேச்சும் பயன்றரும். நன்மை விதைக்கில் நன்மை விளையும். தின்மை விதைக்கில் தின்மை விளையும். உண்மையுந் தகுதியுஞ்செறிந்த நன்னோக்குடன் பேசில் பயனும் அவ்வாறே உறும். பொருளினை அளவும் ஒழுங்குமார்ந்த முறையில் விளக்கி நிற்கிற தன்மையே பயன் பயத்தற்குக் கருவியாம்.

ஓர் உண்மையினை நிலைநாட்டவேண்டியதற்காகப் பேச்சு ஏற்பட்டிருக்கின்றது. ஆதலால் யாண்டும்மறைத்தபொருள்கொண்டுபேசலாகாது.

சிலர் அங்ஙனஞ் செய்யாது நீண்ட நேரம் தங்கள் முடிவிடங்காட்டாது நின்றுபேசியா வருந்திகைக்குமாறு திடீரெனத்தங்கள் கருத்தை வெளியிடுகின்றார்கள். இஃது கேட்போரை மால்கொள்ளச்செய்வதன்றி பயன் பயப்பியாதொழியும். ஏனெனில்வியப்புத்திகைப்பையும், திகைப்பு அலைமலைவையுங் கொடுத்து நெஞ்சுறுதிநிலையை நீக்கி நிற்கும்.

பயனுறுப்பேச்சுப்பேசுவதினும் பேசாதிருந்துவிடல் நலம்

VIII. பேசுநேரவியல்.

எவ்வவையும் ஐந்து நாழிகை நேரத்துக்கு மேற்படாமல் நடத்தப்படலாம். அவையோர் விரும்பில் கொஞ்சநேரம் நீட்டிக் கொள்ளலாம். பேசுமுன் நேரவரையறையை அவைத்தலைவரிடம் அறிந்து கொள்ளல்வேண்டும். அவையோர் பேசுவோர் நிலைமைகொண்டு நேரமதித்து ஏற்படுத்த வேண்டும். கஅறு நாழிகைக்கு மேற் பேசுவோன் ஒருபொருள்பற்றிப் பேசமுடியாதென்று உயர்தரப் பேச்சாளிகள் உரைக்கின்றார்கள். ஒரு பொருள் பற்றிப்பேசுமாறு இரண்டரை (உ இ) நாழிகை நேரங்கொடுக்கில் கடையிலுள்ள

இறு) நாழிகை பேசுவோன் கேட்போர் யாவருக்கும் வறிதே கழிந்தொழியும். ஏனெனில் அந்நேரத்திற்குள்ளேயே தான் முன்னறிந்து வைத்திருந்த பொருளினறிவுகள் அறவுங் குறைந்து காட்டுகின்றன. நேரங்கழிவதெல்லாம் பிறரைப் புகழ்ந்து பேசுவதிலும் மற்றொன்று விரித்தலிலேயுமாம். பேசுவோர் அவையோர் நேரத்தை வீணாக்காமல் குறித்த நேரத்தில் வந்திருத்தல் வேண்டும். பேசுவோனொருவன் பேசத்தொடங்கும் நேரங்கழித்துவரில் அவையோர் யாவருக்கும் அந்நேரம் பயனின்றிப்போம். அவர் அந்நேரத்துட் செய்யற்பாலது பலவாம். கேட்போர்பேசும் பொருளினைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்குமாறு நேரந்தாழ்த்து நிற்கலாகாது. சுருங்கச்சொல்லில் எடுத்தபொருளுண்மைகளைக்குறித்தநேரத்துள் முடித்துக் காட்டலே மேலான பேச்சாளியின் கடனாம்.

நேரமே எவற்றையும் நடத்துங் கருவியாதலால் அதனை எவ்வாற்றானும் ஓம்புக.

IX. பிறன்கோண்மறுப்பியல்.

பேச்சுப்பேசுதற்கும் பிறன்கோண் மறுத்தற்கும் வேறுபாடுமிகவுண்டு. ஒருவன் தன்கோளுக்கு மறுதலைகொண்ட கொள்கையுடைய மற்றொருவனை மறுத்துத் தன்கோள் நிறுவமுயல்வதே பிறன்கோண் மறுப்பாம்.

பொருட்டொகுதிகளை ஒழுங்கு முறை வைத்துப் பேசுமாற்றலும் உண்மையுமுடையவனே இம்மறுப்பு முறை செய்யத்தக்கதாம். பேசும்பொருள் என்ன? பேசுவோர் தொகையென்ன? நேரவரையறை என்ன? என்பதைக் கருதியே பேசல்வேண்டும். இவ்வகை அவையில்

ஒவ்வொருவரும்(உ-இ) இரண்டரை நாழிகையில் ஆறிலொருபங்கு நாழிகைக்குமேற் பேசலாகாது. அவையோர் நிலைமை எண்ணம் முதலியவற்றையும், தன்னைமறுத்தோரையும், மறுப்பின்றன்மையையும், சொன்னபதிலையுங் கருதியே சொல்லவேண்டும்.

X. அவைத்தலைவரியல்.

முதன் முதல் அவைத்தலைவர் பேசத்தொடங்கும்போது அவையிற் பேசப்படவேண்டிய பொருள்கள், பேசுவோர்தொகை, ஒவ்வொருவருக்கும் பேசக்குறிப்பிட்டிருக்கிறநேரம் முதலியவற்றையறிந்துகொள்ளவேண்டும். அவையோர்க்கும் அப்போதைக்கப்போது வேண்டியவற்றைத் தெரிவிக்கவேண்டும். அவை ஒழுங்காய்நடைபெறுகிறதா வென்பதைக் கருதவேண்டும். பேச்சுநடந்துகொண்டிருக்கும்போது பேசுவோனைப்பார்த்தல்கூடாது. ஊடே உரத்துப்பேசி அவன் எண்ணத்தைக்கலைத்தலாகாது. ஏனெனில் தன்பேச்சு

ஆண்டுப் பொருத்தமுடையதல்லவோ வென்னக் கவலுவான். பேசுவோனுக்கு அளித்தநேரம் ஆய்விடுமுன் பேசுவோன் முடித்தற்கு இவ்வளவு நேரந்தானிருக்கிறதென்று தெரிவித்தல் நலம், நேரங்கடந்து செல்ல இடங்கொடுத்தலாகாது ஏனெனில் அவையோர்க்குச் சடைவுண்டாம். அவையோரையும் ஒழுங்குமுறை நிறுத்தல் அவைத் தலைவர் கடனும்.

பேச்சுயாவும் முடிந்தபின் அவைத்தலைவர் முடிவுரைகூறி வாழ்த்தளித்தல் வேண்டும். பின் அவைத்தலைவருக்கும் அவையோருக்கும் அவை நடத்துவான் புகழ் கூறிப் போற்றல் வேண்டும். அவைமீண்டுங்கூடுநேரம் சொல்லவேண்டும்.

XI. முடிபியல்

(1) பேசுவோன் தங்குமிடம்-தூய்மையாயும் மரங்கள் சூழ்ந்த பொழிலுடையதாயும் நீர்நிலைகளமைந்ததாயுமிருத்தல் நலம். (2) உடல்-தூயதாயிருத்தலோடு உள்ளாடையுடன் மேல் வெள்ளாடையாலணியப்படவேண்டும். மெய்ப்பை தலைப்பாகையுடனிருத்தல்நலம். (3) வாய்-கொன்னல் முதலியனகொள்ளாது பேசும்பொருளைத் தனியே யிருந்து சொல்லிப்பயிறல் வேண்டும். கோழைகளைந்து வறட்சியில்லாதிருக்கச் செய்யவேண்டும். (4) கண்-கண்ணாடி வேண்டில் அதனால் அணியப்படவேண்டும். அவையோர் தலை

களின்மேற் பரந்துநின்று எப்பக்கமும் பார்க்க வேண்டும் (5) மூக்கு-சளியின்றி நற்கந்தமுகரல் வேண்டும் (6) செவி-குடுமியாலடைப்பில்லாத தாகித் துப்புரவாயிருத்தல்வேண்டும்(7)நெஞ்சம்-கவலையின்றிப்பேசும் பொருள்களை உள்ளுணர் வால் ஒழுக்குற உணர்தலுடன் கிளர்ச்சியும் ஊக்கமுங்கொண்டு முடிக்கு மாற்றலுடனிருத் தல் வேண்டும் (8) ஊண்-கற்கண்டு, மிளகு, சுக்குமுதலியன கலந்த வெந்நீரோடு மயக்க மில்லா ஊணுமருந்தவேண்டும். (9) நடை-வெ யில், மழை,காற்றில் விரைவாய்நடந்துசெல்லாது பேசுமிடத்துக்கு ஊர்தி ஊர்ந்து செல்லவேண் டும். (10) கை- எழுதுகோல் நூல் தான்பேச வேண்டிய பொருட் குறிப்புகள் முதலியவற்றுட னிருத்தல் வேண்டும். (11) கால்- இருமருங்கும் பார்த்துப் பேச்சுமேடைக்குச் செல்லவேண்டும். (12) நண்பு- நட்பாளருடனிருக்கினும் பொரு ளறிதலைவிட்டுப் பேசிக்கொண்டிருத்தலாகாது. (13)பேசுமிடம்-பலகணிகாற்கருவிவிளக்கு இவை கள் பொருந்தியிருப்பதோடு கல்விபயின்ற பல ராலுங் குழுமியிருத்தல்வேண்டும். (14) பேசும் மேடை-உயர்ந்ததாயும் நாற்காற் பலகையுள்ளதா யும் சிறு விளக்குள்ளதாயுமிருத்தல் நலம் (15) பேசுவோன்-சுருக்கிய பாவால்தெய்வம் வழி

பட்டுச்சிறுகிய அவையடக்கங்கூறவேண்டும். எடுத்த பொருளைப்பொது நோக்காற் சுருங்கக்கூறிப் பின்னதனை விரித்து இனியமெல்லோசையுடன் கூடிய மொழித்தொடர்புகளால் அளவைத்திறன் காட்டிக் கேட்போருள்ளங் கவருமாறு பேச வேண்டும். நினைக்குமாறு பேசிற்பயன்பயக்கும். அன்புக்கிளர்ச்சியுமுறல் வேண்டும். ஒன்றை முடித்தபின் அதிக நேரம் இடைநிறுத்தாது மற்றொன்றினைப்பேசுக. நிறுத்தலும் தொனிமாற்றலும் அளவோடு மொழிதலும் அழகினைப்பயந்து கேட்போர் உள்ளத்தையிழுக்கும் கேட்போர் கருத்தை அடிக்கடி உணர்ந்து அழுத்திச்சொல்ல வேண்டியவைகளை இருமுறை கூறுக. பத்துக் குற்றங்கள் பொருந்தாது சொல்லாற்றல், பொருளாற்றல், காலவரையறை முதலியவற்றைக் கருதிப்பேசவேண்டும் (16) அவையோர்- சிரித்தல், உரக்கப்பேசல் முதலிய தீக்குணங்களின்றி ஒழுங்கான முறையிலிருக்கவேண்டும். (17) அவைத்தலைவர்- கற்றவராய்வீற்றிருந்து குறித்தகாலத்துள் அவையைமுறையாய் நடத்தி யாவரும்வியக்குமாறு முடிவுரை கூறுக (18) அவைநடத்துவோன் யாவருக்கும் வாழி கூறிப்போற்றுக.

நூல் முற்றிற்று.

அருஞ்சொல் விளக்க அட்டவணை.

I. பொதுவியல்.

மக்கட்பிறப்பு	= மனுஷ ஜென்மம்.
யாக்கை.	= சரீரம், தேகம்
பொறி.	= இயந்திரம்.
புறவுடல்.	= ஸ்தூலதேகம்.
உள்ளுடல்.	= சூக்ஷ்மதேகம்.
முதலுடல்	= லிங்கதேகம்.
முதலிடம்.	= மாயை.
தோன்றி இருந்து ஒடுக்கும்.	சிருஷ்டி, திதி, ஸம்ஹா = ரப்படும்.

முதனிலை.	= மூலாதாரம்.
குழி.	= குண்டம்.
உதிரப்பை.	= இரத்தாசயம்.
உடன்முப்பிணி.	= வாதம், பித்தம், சிலேஷ்மம்.
உந்திக்கால்.	= உதானனென்னும்வாயு.
காற்று.	= வாயு.
காணிகள்.	= தந்திகள்.
ஐம்பொறிகள்.	= பஞ்சேந்திரியங்கள்.
ஐம்புலன்கள்.	= பஞ்சதன்மாத்திரைகள்.
வலி.	= திடம்.
நினைப்புக்கருவி.	= மனம்.
மெய்.	= தேகம்.
ஊழ்.	= கன்மம்
கருவிகள்.	= தத்துவங்கள், காரணங்கள், சாதனங்கள்.
உயிர்.	= ஆன்மா.
அறிவு, நசை, செயல்	= ஞானம், இச்சை, கிரியை.
யாறு.	= நதி
பொருள்.	= பதார்த்தம், விஷயம்.
ஒலி.	= நாதம்.
ஐம்பெருநிலையிற்பொருள்.	= பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.
வானம்.	= ஆகாயம்.

ஓசை.	= சப்தம்.
சொல்லொலி.	= வாக்கு.
ஒலிமுதல்வழி.	= நாதமூலகாரணம்.
முதனிலையொலி.	= சூக்குமை வாக்கு.
மார்பொலி.	= பைசந்தி வாக்கு.
கழுத்தொலி.	= மத்திமை வாக்கு.
வாயொலி.	= வைகரி வாக்கு.
முட்டை.	= அண்டம்.
நிறம்.	= வண்ணம்.
எழுத்துரு.	= அக்ஷர சொரூபம்
பொது.	= சாமானியம்.
ஆயுங்கருவி.	= புத்தி.
உயிர்ப்புக்கால்.	= பிராணவாயு.
கழுத்து.	= கண்டம்.
பத்துப்பா குடைக் கால்.	= தசவாயு
உட்கருவிக்களம்	= அந்தக்கரணம்.
முழுக்குங்கருவி.	= சித்தம்.
எழுப்புங்கருவி.	= அகங்காரம்.
உச்சி.	= கபாலமத்தியம்.
விரற்கடை.	= அங்குலம்.
மூக்கு	= நாசி.
ஆராய்ச்சி.	= விசாரம்.
எண்ணர்.	= தார்க்கிகர்.

எண்ணூல்.	= தருக்கசாஸ்திரம்.
கருதலளவை.	= அநுமானம்.
வழி.	= காரணம்.
வரவு.	= காரியம்.
ஏரணம்.	= தருக்கம்.
புலமை.	= ஞானம்.
அவை.	= சபை
பொருளறிவு.	= கலைஞானம்.
சொற்பொழிவு.	= பிரசங்கஞ்சொல்லல்.
முழுநிலை.	= பூரணம்.
மேற்கோள்நூல்.	= இலக்கியம்.
ஒழுங்கியல்நூல்.	= இலக்கணம்.
அளவைநூல்.	= தருக்கம்.
புலமைநூல்.	= சாஸ்திரம்.
வரலாற்றினூல்.	= சரித்திரம்.
பொறித்தல்.	= பதித்தல்
வைப்பு.	= கருகூலம்.
பேச்சவை.	= பிரசங்க சபை.
விரிவு.	= விபரம்.
உயிர்ப்புப்பை	= சுவாசப்பை.
உள்ளே இழுத்தல்.	= பூரகம்.
வெளிவிடல்.	= ரேசகம்.
வயிறு.	= உதரம்.
நெஞ்சு.	= மனம்.

ஒலிநாண்.	= நாததந்தி.
யாழ்	= வீணை
உயிர்க்கிழவன்.	= ஆன்மா.
காற்றாட்டுங்கருவி.	= சுவாசக்குழாய்.
களிப்பு.	= சந்தோஷம்.
மொழி.	= வார்த்தை.
நடை.	= கதி.
கருத்து.	= கவனம்.
விரைவு.	= அவசரம்.

2-வது இயல்.

கழகம்.	= சபை.
உரிமை.	= சுதந்தரம்.

3-வது இயல்.

நேரம், இடம், செயல்.	= கால, தேச, வர்த்தமானம்.
பாய்மா.	= அசுவம்.
சுளுகு.	= உபாயம்
நடுநிலை.	= மத்தியதரம்.
கோழைத்தனம்.	= அதைரியம்.
கையடையாளம்.	= சமிக்கை.
ஐயம்.	= சந்தேகம்.
திரிவு.	= விபரீதம்.
கிழி.	= சித்திரப்படம்.

மதித்தல்.	= நிதானித்தல்.
ஊமை.	= மூகை.
நெஞ்சினுரம்.	= மனோதைரியம்.
சிறப்பு.	= அசாதாரணம்.
ஆவல்.	= அபேக்ஷை.
மேற்கோள்.	= திருஷ்டாந்தம்.
ஒப்புமையணி.	= உவமாலங்காரம்.

4-வது இயல்.

நாவலன்.	= பிரசங்கி.
செய்யுள்செய்வோன்.	= கவி
பொருள்விரிப்போன்.	கமகன்.
பிறர்கோண்மறுப்போன்.	= வாதி.
வீட்டுநெறியுரைப்போன்.	= வாக்கி
வழக்குமுறை.	= வசனக்கிரமம்.
துணிவு.	= திடம்.

5-வது இயல்.

அறம்	= தருமம்
பொருள்.	= அர்த்தம்.
இன்பம்.	= காமம்.
வீடு.	= மோக்ஷம்.

6-வது இயல்

அருமருந்து. = அமிர்தம்.

பொருண்முடிவு. = தாற்பரியம்.

7-வது இயல்

பயன். = பிரயோஜனம்.

8-வது இயல்

நாழிகை. = கடிகை.

நேரவரையறை. = காலப்பிரமாணம்.

9-வது இயல்

பிறன்கோண் மறுப்பு. = வாதம்.

பதில். = உத்தரம்.

10-வதுஇயல்

அவைத்தலைவர். = அக்கிராசனாதிபதி.

11-வதுஇயல்

தூய்மை. = பரிசுத்தம்.

பொழில். = சோலை.

நீர்நிலை. = தடாகம்.

உள்ளாடை. = கௌபீனம்.

மெய்ப்பை. = தேகாரக்ஷை

வறட்சி. = காய்வு

ஊர்தி = வாகனம்.

பலகணி. = சாளரம்.

காற்கருவி. = வாய்வு இயந்திரம்.

போற்றுதல். = துதித்தல்.

இந்நூற்கு வேண்டற்பாலனவான செய்யுட்கள்.

பத்தழகு.

சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல்
நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல்
ஓசையுடைமை யாழமுடைத்தாதல்
முறையின் வைப்பே யுலகமலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதாரணத்த
தாகுதனூலிற் கழகெனும்பத்தே.

பத்துக்குற்றம்.

ஈரைங் குற்றமு நேரிதி னாடிற்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
குன்றக்கூறன் மிகைபடக் கூறல்
பொருளில மொழிதன் மயங்கக் கூறல்
கேட்டோர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியா னிழுக்கக் கூறல்
தன்னா னொருபொருள் கருதிக் கூற
லென்ன வகையினு மனங்கோ ளின்மை
யன்ன பிறவு மவற்று விரியாகும்.

தருக்கம்.

"புத்தி விசாரம் புரிதலே தருக்கம்"

"ஞாயம் பொருந்த மொற்றுமை நெறிப்பட்
வாய்ந்தினி துணர்ந்துபி னறைதல் தருக்கம்"

"தருக்கமொழிபொருண் முன னுதல் தழுவும்."

நால்வகைப்புலவர்.

கவிகமகன் வாதி வாக்கியெனப்
புவிமேற் சொல்லும் புலவர் நால்வர்.

ஆசு மதுரஞ் சித்திர மகலம்
பாவகை பாடுவோன் கவியெனப்படுமே.

நிறைந்த கல்வியா னிறைந்த வறிவா
னறைந்த வொருபொரு ளதனை விரிக்க
வல்லவன் கமகன் சொல்லுங் காலே.

ஏதுவுமேற் கோளு மெடுத்துக் காட்டித்
தன்கோ ளிறீஇப் பிறர்கோண் மறுக்கும்
வன்புடை யோனே வாதி யாவான்.

அறம்பொரு ளின்பம் வீடெனு நான்குந்
திறம்பா திவரச் செஞ்சொற் கொண்டரு
ளேக்கியுரைப்போன் வாக்கி யாவான்.